**தும்பனே பிரதேச சபையின் - 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தும்பனே பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமை விபரங்கள், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் தும்பனே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்குஇணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்குஇணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 15,166,453 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆண்டு கணக்குடன் சரிசெய்வதாக மற்றும் கிடைக்க வேண்டிய முத்திரை கட்டணம் தொடர்பாக காணி பதிவாளர் அலுவலகத்தில் விசாரிப்பதென. | முத்திரைக் கட்டண வருமானத்தை சரியாக இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் சபைக்கு சொந்தமான சொத்துக்களை மேம்படுத்துவதற்காக 06 சந்தர்ப்பங்களில் மேற்கொண்ட ரூபா 10,010,588 தொகையை மூலதனமாக்கி இருக்கவில்லை. | 2022 ஆண்டில் கணக்கு தயாரிக்கும் போது சரிசெய்வதென. | மூலதன செலவுகளை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | சபை நிதியத்தின் மூலம் நிர்மாணித்த நீர் கருத்திட்டமொன்றிற்காக செலுத்தியிருந்த ரூபா 6,500,000 மீண்டும் கடன்கொடுனராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆண்டில் கணக்கு தயாரிக்கும் போது சரிசெய்வதென. | கடன்கொடுனர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் சபை நிதியத்தினால் செயற்படுத்தவிருந்த எனினும், வேலைகள் பூர்த்தி செய்யப்படாத 18 கருத்திட்டங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 3,375,000 தொகை கடன்கொடுனராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மூலப்பொருட்களின் விலை ஏற்ற இறக்கமடைந்ததால், வேலைகளை பூர்த்தி செய்ய முடியவில்லையென. | கடன்கொடுனரகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டு இறுதியில் நிலையான சொத்து மீதி ரூபா 202,832,157 மற்றும் மூலதன ஈடுபடுத்தலிற்கு வருமானத்தால் பங்களிக்கும் கணக்கு மீதி ரூபா 201,911,569 ஆனதில்,ரூபா 920,588 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 2022 ஆண்டு நிதிக்கூற்றுக்கள் மூலம் சரசெய்வதென. | வித்தியாசத்தை இனங்கண்டு சரிசெய்ய வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் சபை நிதியத்தை பயன்படுத்தி மேற்கொண்ட 02 வேலைகளிற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 933,267 தொகை கடன்கொடுனராக கணக்கீடு செய்யப்படவில்லை. | 2022 ஆண்டில் கணக்குகளுடன் சரிசெய்வதென. | கடன்கொடுனர் மீதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டிற்குரிய கடை வாடகை ரூபா 1,165,025 தொகை வருமான செலவுக் கணக்கில் வாடகை வருமானமாக கணக்கீடு செய்யப்படவில்லை. | 2022 ஆண்டில் கணக்குகளுடன் சரிசெய்வதென. | ஆண்டின் வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று 05 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கணக்கு மீதி மற்றும் துணை பதிவேடுகளின் மீதிகளிற்கிடையில் ரூபா 1,395,802 ஆன வித்தியாசம் நிலவியது. | பல வருடகாலங்களிற்கு அதிக காலமாக நிலவும் நிலுவை ஆகையால், சரி செய்து கணக்காய்விற்கு சமர்பிப்பதென. | வித்தியாசத்தை இனங்கண்டு சரியான பெறுமானத்தை கணக்குகளில் செம்மையாக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாததால்,ரூபா 69,946,581 ஆன சொத்து விடயமொன்றை மற்றும் ரூபா 17,872,315 ஆன பொறுப்பு விடயமொன்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | பதிவேடுகளில் தகவல்களை குறிப்பிட ஆரம்பித்ததாக மற்றும் விரைவில் கணக்காய்விற்கு சமர்பிப்பதென. | சொத்து மற்றும் பொறுப்பு மீதிகளை உறுதி செய்து கொள்ளக்கூடிய பதிவேடுகளை பேணிச் செல்ல வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| | 126 அத்தியாசம் | அனுமதிப்பத்திரத்தின் கீழ் நடாத்திச் செல்லும் மணல் துறைகளிற்காக துணை சட்டம் தயாரித்து அறவிட வேண்டிய கட்டணத்தை வர்தமானியில் வெளியிடாது ரூபா 205,000 ஆன கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டு ஆகஸ்ட் வரை அனுமதி பெற்றுள்ளதென. | தேவையான துணைச் சட்டங்களை தயாரித்துக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | நிதிப்பிரமாணம் 571 | வைப்பு பதிவேட்டில் உள்ளடங்கிய 2015 முதல் 2018 கால எல்லையினுள் வைப்பு செய்யப்பட்ட 03 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 1,287,626 ஆன காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக குறித்த செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டில் கணக்குகளுடன் செம்மை செய்வதென. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 16,820,904 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 23,524,622 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 1,757,218 ஆன வீதவரியை அறவிட்டிருக்காததுடன் அம் மீதயினுள் 01 ஆண்டு முதல் 06 ஆண்டுகளிற்கிடையிலான காலமாக நிலவிவரும் ஒரு அலகின் நிலுவை ரூபா 1,000 இலும் அதிகமான 433 ஆதனங்களிற்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 1,493,962 தொகை மற்றும் வீதவரி ஆதனங்களின் உரிமையாளர்களை சரியாக இனங்காணாத 123 அலகுகளிற்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 90,903 தொகை உள்ளடங்கியிருந்தது. | வருமான முன்னேற்றத்தை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். | நிலுவைவீதவரி அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | கழிவுப்பொருள் வரி | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 739,970 ஆன கழிவுப்பொருள் வருமானமொன்று அறவிடப்பட்டிருக்காததுடன், அம் மீதியினுள் அலகொன்றின் நிலுவை ரூபா 10,000 விஞ்சிய 21 நிறுவனங்களிற்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 276,750 மற்றும் பில்லிடல் நிறுத்தப்பட்டிருந்து 95 நிறுவனங்களிற்குரிதாக அறவிட வேண்டிய ரூபா 571,550 தொகை உள்ளடங்கியிருந்தது. | நிலுவை கழிவுப்பொருள் வரியிலிருந்து ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளதாக மற்றும் எஞ்சிய தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை கழிவுப்பொருள் வரி அறவிடப்பட வேண்டும். |
| (இ) | வாடகை | | |
| | கடையறை வாடகை | | |
| | ஹதரிலியத்த பிரதேசத்தில் கடையறைகளிற்காக 2017 ஆண்டில் மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் வழங்கிய மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடாததால், மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 547,250 ஆன வாடகை வருமானமொன்று சபைக்கு இழக்கப்பட்டிருந்தது | உரிமையை வழங்காததன் மீது உடன்படிக்கையை புதுப்பிக்க இயலுமை இல்லையென. | புதிய மதிப்பீட்டை செயற்படுத்தி கடை வாடகை அறவிட வேண்டும். |

(ஈ) நீர் வருமானம்

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 696,931 ஆன நீர் கட்டணம் அறவிடப்பட்டிருக்காததுடன், அம் மீதியினுள் 07 நீர் கருத்திட்டங்களின் 80 நுகர்வோர்களிடமிருந்து 2017 ஆண்டு முதல் அறவிட வேண்டிய ரூபா 249,515 தொகை உள்ளடங்கியிருந்தது. | நிலுவை நீர் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை நீர் கட்டணத்தை அறவிட வேண்டும். |

(ஊ) முச்சக்கர வண்டி கட்டணம்

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 1,974,490 ஆன முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்பட்டிருக்காததுடன், அம் மீதியினுள் ரூபா 50,000 இலும் அதிகமான 18 முச்சக்கர வண்டி தரிப்பிடங்களிற்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 1,671,165 தொகை உள்ளடங்கியிருந்தது. | முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் மற்றும் போலிசுடன் கலந்துரையாடி நிலுவை அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவையாகவுள்ள முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திர கட்டணத்தை அறவிட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| கடந்த மற்றும் மீளாய்வாண்டில், மேற்கொண்டிருந்த பண்டக கணிப்பீட்டின் போது,ரூபா 74,250 ஆன 08 தொகுதி உடல்விருத்தி பொருட்களின் பற்றாக்குறை இனங்காணப்பட்டிருந்த போதும், நிதிப்பிரமாணம் பிரகாரம் விசாரணை நடாத்தி பொறுப்புதார தரப்பினரிடமிருந்து குறித்த பெறுமதியை அறவிட்டிருக்கவில்லை. | போலிஸில் முறைபாடொன்றை தாக்கல் செய்துள்ளதாக மற்றும் பொறுப்புதார தரப்பினரை இனங்காண்பதற்காக விசாரணை நடாத்துவதாக. | நிதிப்பிரமாண பிரகாரம் விசாரணை நடாத்தி முன்நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| ஹதரலியத்த வியாபார கட்டிடத் தொகுதியின் 04 கடையறைகளிற்காக 1½ ஆண்டுகள் முதல் 04 ஆண்டுகள் வீச்சளவு காலமாக வரி செலுத்தியிருக்காததுடன், அதன் காரணமாக சபைக்கு வருமானம்இழக்கப்பட்டிருந்தது. | போலிஸில் முறைபாடொன்றை தாக்கல் செய்துள்ளதாக மற்றும் பொறுப்புதார தரப்பினரை இனங்காண்பதற்காக விசாரணை நடாத்துவதாக. | கடையறைகளை குத்தகைக்கி வழங்குவதனூடாக வருமானம் ஈட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 28,888,879 ஆன 06 வாகனங்களிற்கிடையில் 02 வாகனங்கள் 2014 ஆண்டு முதலும், 04 வாகனங்கள் கடந்த ஆண்டு முதலும் சாரதிகள் இல்லாத காரணத்தால் குறை பயன்பாட்டுடன் நிலவின. | சாரதிகள் இல்லாததன் காரணமாக வாகனங்கள் குறை பயன்பாட்டுடன் நிலவுவதாக. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

### 3.4 வாகனத் தொகுதியின் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆண்டில் பிரதேச சபையினால் செலுத்துகையில் தீவிபத்திற்குள்ளாகி இருந்த மோடார் வாகனமொன்று தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(1) பிரகாரம் நட்ட மற்றும் இழப்பை இனங்கணபதற்கான விசாரணையொன்றை மீளாய்வாண்டு இறுதிவரை 07 ஆண்டுகள் செல்லும் வரை மேற்கொண்டிருக்காததுடன் வாகனத்தை திருத்த வேலைகளுக்கு அனுப்பாது 07 ஆண்டுகளிற்கு அதிக காலமாக விளைவற்று நலவியது. | தற்போது ஆரம்ப புலனாய்வு மற்றும் 104(3) விசாரணையொன்று மேற்கொண்டுள்ளதாகவும் இறக்குமதித் தடை காரணமாக திருத்த வேலைகள் நின்றுள்ளதாக. | விபத்து தொடர்பாக குறித்த நிதிப் பிரமாணம் பிரகாரம் விரைவில் செயற்பட வேண்டும். |